# செவ்வியல் பண்புகளும் சமுதாயச் சிந்தனைகளும்

**இரா. சசிகலா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
*மற்றும்*
**முனைவர் அ. குழந்தைசாமி**
இணைப்பேராசிரியர் (ஓய்வு), தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

**முன்னுரை**

மக்கள் வாழ்க்கையில் பின்பற்றத்தக்க நல்ல நெறிமுறைகளை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வகுத்தளித்தவை சங்க இலக்கியங்களாகும். நல்லொழுக்கம், கலை, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம், நாகரிகம் போன்றவற்றைப் பிரதிபலித்து நிற்பவை சங்க இலக்கியங்களேயாகும். இந்த நூல்களின் கருத்துக்களை இன்றும் மக்கள் அறிந்தும் ஏற்றுக் கொள்கின்றனர். அறவழியில் நின்று இல்லறக் கடமை ஆற்ற விரும்பிய ஆண், பெண் இருவரும் ஒருவர் மீது கொண்ட நட்பின் மேன்மை, இனிமை, அறிவு, ஒழுக்கம், தனித்துவம் முதலான பண்புகளைக் காலம் கடந்தும் இன்றைய சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டி சங்க இலக்கியங்கள் நல்வழிப்படுத்துவதால் இதனைச் செவ்வியல் இலக்கியம் என்பர். எனவே செவ்வியல் இலக்கியங்களில் காணப்படும் செவ்வியல் பண்புகள் எக்காலச் சமுதாயத்திற்கும் பொருந்துவனவாகவே அமைந்துள்ளன என்பதைப் பற்றி அறிவதே இவ்வாய்வுக் கட்டுரையின் செல்நெறியாகும்.

**தொன்மைப் பண்புகள்**

செவ்வியல் மொழித்தன்மை என்ற கூறுபாட்டினுள் முதன்மையானதாகத் தொன்மைப் பண்பு அமைந்துள்ளது. தொன்மை என்றால் மிகவும் பழமையானது என்ற பொருளைக் குறிக்கும்.

**தலைவனின் வாய்மை**

செல்வக்கடுங்கோ வாழியாதனைக் கபிலர் குறிப்பிடுகையில்,

> ‘‘பொய்த்தற்கு உரியனோ? பொய்த்தற்கு உரியனோ?
> அஞ்சல் ஓம்பு என்றாரைப் பொய்த்தற்கு உரியனோ?
> குன்று அகல் நல்நாடன் வாய்மையில் பொய்த்தோன்றின்,
> திங்களுள் தீத்தோன்றி யற்று’’[1] (கலி. 41)

என்ற பாடலில் தலைவனின் வாய்மையைப் பாராட்டுகின்றார். என் தலைவன் பொய்த்தான் என்றால் நிலவிலே தீ தோன்றினது என்று கூறுவதன் மூலம் தொன்மைக் கருத்து இங்கு வெளிப்படுகின்றது. இக்கருத்து எக்காலத்திற்கும் ஏற்புடையதாகும். இன்றும் மக்கள் பொய்க்காமல் நடந்து கொண்டால் சமுதாயம் மேன்மேலும் உயர்ந்து காணப்படும் என்ற கருத்தினை மேற்கூறிய கலித்தொகைப் பாடல் வரிகள் மூலம் கபிலர் விளக்குகின்றார்.

**புலவர்களின் வாய்மை**

சங்க காலத்தில் புலவர்கள் பொய்கூறாமல் வாழ்ந்துள்ளனர். என்பதை,

> ‘‘வாழ்தல் வேண்டிப்
> பொய் கூறேன்; மெய் கூறுவல்;’’[2] (புறம். 139)
> ‘‘செய்யா கூறிக் கிளத்தல்
> எய்யாதாகின்று, எம் சிறுசெந் நாவே’’.[3] (புறம். 148)

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் மூலம் சங்கப் புலவர்கள் எந்நிலையிலும் வாய்மை தவறாமல் வாழ்ந்துள்ளனர் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. இதன் வழி மக்கள் தம்

அன்றாட வாழ்வில் வாய்மையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது மறைமுகமாக உணர்த்தப்படுகின்றது.

**பொதுமைப்பண்புகள்**

பொதுமைப் பண்பு என்பது உலகிலுள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். (பொதுவான பண்புகள் அல்லது பொதுவான வாழ்வியல் முறைகள் என்று கூறலாம்.)

**அன்பு**

அன்பானது மொழியால், பண்பாட்டால் வேறுபட்ட எம்மக்களையும் ஈர்க்கக் கூடிய அனைவருக்கும் உரிய பொதுப்பண்பாகும். தலைவன் ஒருவன் தன் மீது வைத்துள்ள மாறாத அன்பின் தன்மையை அதன் அளவிடற்கரிய பெருமையைக் கூறும் பொழுது தலைவியானவள்,

“நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆர் அளவின்றே – சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே”[4] (குறுந். 3)

என்று வியந்து பேசுகின்றாள். தலைவனின் அன்பு பரந்துபட்டது என்றும் இந்நிலவுலகையும் விட உயர்ந்தது என்றும் தலைவி கூறுவாள். வானத்தை விடவும் உயர்ந்தது. கடலின் ஆழத்தை விடவும் தலைவன் அன்பு உயர்ந்தது என்று அன்பின் ஆழத்திற்கு உவமை கூறுகின்றாள். இங்கு தலைவியின் உள்ளக் குறிப்பு முக்கியமன்று. அன்பின் பரிமாணம் அளவிடற்கரியது என்று கூறும் முறையே இங்கு நோக்கத்தக்கதாகும். இத்தகு அன்பின் மாண்பை உலகம் உணர வேண்டும் என்ற பொதுமைப் பண்பைச் சங்க இலக்கியம் வாயிலாக இச்சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டுகின்றது.

**உலகுடன் ஒட்டி வாழ்தல்**

மாந்தருக்குச் சொந்த ஊர் என்ற ஒன்றில்லை. எல்லோரும் நம் உறவினரே என்றும் வாழ்க்கையிலே தாம் பெற்ற உயர்ந்த தெளிவை இச்சமுதாயமும் பெறவேண்டும் என்பதையும் பின்வரும் பாடல் வரிகள் மூலம் கணியன் பூங்குன்றனார் எடுத்துரைக்கின்றார்.

“யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர் தர வாரா;
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.”[5] (புறம். 192)

என்ற புறநானூற்று வரிகள் மூலம் உயிர்வாழ்க்கை இயற்கைமுறை வழி நடக்கும். என்ற வாழ்க்கை அனுபவத்தைப், புலவர் கூறுகின்றார். இதன் வழி எல்லோரும் நம் உறவினர். எல்லா ஊரும் நம் ஊரே என்ற பொதுமனப்பான்மையுடன் உலகத்தோடு ஒட்டி வாழ வேண்டும் என்ற கருத்து இங்குப் புலனாகின்றது.

**திருமணம்**

சங்க இலக்கியங்களில் திருமணம் நடைபெறும் முறைபற்றிப் பல பாடல்கள் தெளிவுப்படுத்துகின்றன. மரபோடு தொடரக்கூடிய திருமணமுறைகள் கலித்தொகையில் காணப்படுகின்றது. மணமக்கள் தீயினை வலம் வரும் மரபு இன்றும் சமுதாயத்தில் இருந்து வருகின்றது என்பதனை,

“மாதர் கொள் மான்நோக்கின் மடந்தைதன் துணையாக,
ஓதுடை அந்தணன் எரிவலம் செய்வான் போல்”[6] (கலி. 69)

என்ற மருதக்கலிப் பாடல் அடிகளின் மூலம் தீ வலம் வரும் நிகழ்வினையும் மரபுடைமையின் பண்பினையும் அறிய முடிகிறது. இவ்வழக்கம் இன்றைக்கும் சமுதாயத்தில் காணமுடிகின்றதை நம்மால் உணர முடிகின்றது.

**விருந்தோம்பல்**

இல்லற வாழ்கையில் விருந்தோம்பல் பண்பு தலைவிக்கு மிகவும் இன்றியமையாத பண்பாகும். விருந்தினரை அன்புடம் எதிர்கொண்டு வரவேற்று, முதலில் மெல்லிய சொற்களால் நலம் விசாரிப்பாள். வழியிலுள்ள ஏதங்களையும், பொழுது சாய்ந்ததையும் எடுத்துக்கூறி தம் இல்லத்தில் தங்குமாறு கூறுவாள். இது பழந்தமிழரின் பண்பாகும். மேலும் வந்த விருந்தினரை அயலராகக் கருதாமல் தம் உறவினராகவே கருதும் பண்புடையவள். என்பதனை,

"சேணின் வருநர் போலப் பேணா,
இருங்கலி யாணர்எம் சிறுகுடித் தோன்றின்,
வல்எதிர் கொண்டு, மெல்லிதின் வினைஇ,
எல்லின்று; தோன்றல்! செல்லாதீம் என,
எமர்குறை கூறத் தங்கி, ஏமுற[7] (அகம். 300)

என்ற அகநானூற்றுப் பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது. இவ்வாறான விருந்தோம்பல் பண்பு காலம் காலமாகச் சமுதாயத்தில் தொடர்ந்து வந்து கொண்டுதான் உள்ளது. எனவே இப்பண்பாட்டால் சமுதாயம் மேம்பாடு அடைந்துள்ளது என்பதை உணர முடிகின்றது.

**பெண்மகளின் இயல்பு**

சந்தனம் மலையில் பிறக்கிறது. ஆனால் மலைக்குப் பயன்படுவதில்லை அதனை பூசிக்கொள்பவர்க்கே பயன்படுகின்றது. முத்து கடல் நீரில் பிறக்கின்றது. ஆனால் கடலுக்குப் பயன்படாது அதை அணிபவர்க்கே பயன்படுகின்றது. இசை யாழிலே பிறக்கின்றது, அது யாழுக்குப்பயன்படாது, அது கேட்பவர்க்கே பயன்படுகின்றது. இதுபோல் உன்மகளும் தலைவனுக்கே உரியவள் என்பதனை,

"பல உறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம் என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே."[8] (கலி. 9)

என்ற கலித்தொகைப் பாடல் வரிகள் மூலம் பெண் ஆனவள் பருவமடைந்து மணமுடிந்தவுடன் பெற்றோர்க்கன்றி தான் மணந்த தலைவனுக்கே முற்றிலும் உரிமையானவளாவாள் என்ற வாழ்வியல் இயற்கையை எடுத்துரைக்கின்றது. இச்செவ்வியல் பண்பும் சமுதாயத்தில் நிலைபெற்றுள்ளது.

**நடுவுநிலைமை**

சங்க இலக்கியங்களில் உள்ள பெரும்பாலான அக இலக்கியங்கள் தற்சார்பு நிலையின்றி பொதுச்சார்பு நிலையோடு நடுவுநிலைமையுடன் காணப்படுகின்றன. ஒரு படைப்பாளன் தன் எண்ணத்தைத் தன்னுடையது என்று நேரடியாகக் காட்டிக் கொள்வது தற்சார்பு. ஆனால் பாத்திரங்கள் வழியாகக் காட்டி நிற்பது, அதாவது தன்னைக் காட்டிக் கொள்ளாமல் நடுவுநிலைமையோடு இருப்பது பொதுச்சார்பு நிலையாகும்.

**தலைவியின் புலம்பல்**

தலைவனைப் பிரிந்த தலைவிக்கு இரவில் உறக்கம் வரவில்லை. தான் படும் துன்பத்தைப் பலவாறாகக் கூறிப் புலம்புகின்றாள். இதனை,

"முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?
ஓரேன், யானும்: ஓர் பெற்றி மேலிட்டு
ஆஅ! ஒல் எனக் கூவுவேன் கொல்?"[9] (குறுந். 28)

என்ற பாடலில் அடிகளின் மூலம் ஔவையார் எடுத்துரைக்கின்றார். ஊரார்க்கு என் நிலையினை எப்படி அறிவிப்பேன், இதனால் நான் முட்டுவேனோ, தாக்குவேனோ, ஏதேனும் ஒரு காரணம் முன்னிட்டு கூவுவேனோ என்று தலைவி புலம்புகிறாள். இவ்வாறு தலைவனைப் பிரிந்து தலைவிபடும் புலம்பலை மேற்கூறிய குறுந்தொகைப் பாடல்வரிகள் விளக்குகின்றன.

### நிலைபேறு

செவ்வியல் பண்புகளுள் ஒன்று நிலைபேறு. நிலைபேறுள்ள இலக்கியங்களே காலம் கடந்தும், நாடுகடந்தும், மொழி கடந்தும் வாழ்கின்றன என்பதை இப்பண்பு நிலைத்துநின்று விளக்குகின்றது.

### அன்புடைய நெஞ்சம்

காதலர்களின் பெற்றோர்கள் இருவரும் ஒரு குலத்தினர் அல்லர். காதலன், காதலி இருவரும் அதற்கு முன் ஒருவரை ஒருவர் கண்டவர்களும் அல்லர். அப்படியிருந்தும் அவர்களுக்குள் காதல் மலர்ந்து களவு மணம் புரிந்தும் கொண்டனர். இனி தமக்குள் பிரிவு இல்லை என்றும், இதைத் தெய்வீகக் காதல் என்றும் கூறுவர். என்பதனை,

> “யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
> எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
> யானும் நீயும் எவ்வழி அறிதும்?
> செம்புலப் பெயல் நீர் போல
> அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.”[10] (குறுந். 40)

என்ற குறுந்தொகைப் பாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது. இப்பாடல் நிலைபேறுடைய பாடலாகும். அதன் கருத்துக்கள் எக்காலத்திற்கும் நிலைத்து நிற்கும் தன்மை உடையதாகும். இப்படிப்பட்ட நிலைபேறு கொண்ட பண்புகள் மக்கள் சமூகத்திற்குப் பெரிதும் பயன்படக் கூடியவையாக உள்ளன. இக்கருத்து இக்காலச் சமூகத்தினர் கடைபிடித்து காதல் திருமணத்தால் வரதட்சணைக் கொடுமையைப் போக்கியுள்ளனர். ஆகவே இப்பாடல் செவ்வியல் பண்புகளான நிலைபேறு தன்மையுடையதாகவே காணப்படுகின்றது.

### தனித்தன்மை

பிற இலக்கியங்களில் உள்ளதை விடச் சிறப்பாக இடம்பெற்றிருக்கும் பண்புகளே தனித்தன்மைப் பண்பாகும்.

### தெய்வ வழிபாடு

இப்பண்பின் மூலம் ஏதேனும் ஓர் எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டுதான் பெரும்பாலும் பெண்கள் தெய்வ வழிபாடு செய்வார்கள். என்பதனை,

> “கரு வயிறு உறுக எனக் கடம்படுவோரும்,
> செய் பொருள் வாய்க்க எனச் செவி சார்ந்துவோரும்,
> ஐஅமர் அடுக என அருச்சிப்போரும்”[11] (பரி. 8)

என்ற பரிபாடல் வரிகள் மூலம் அறியமுடிகிறது. என் வயிற்றிலே கருப்பம் தரிக்க வேண்டும் என்று சில பெண்கள் வேண்டிக்கொள்ளுகின்றனர். என் கணவருக்குச் சிறந்த செல்வம் கிடைக்க வேண்டும் என்று சில பெண்கள் வணங்குகின்றனர். வியக்கத்தக்க போரிலே எம் கணவருக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்று பெண்கள் சிலர் வழிபடுகின்றனர் என்பதை இப்பாடல் வரிகள் விளக்குகின்றன. இதன்வழி, அக்காலம் மட்டுமல்ல எக்காலமும் பொருந்தும் வகையில் இறைவழிபாட்டை உணர முடிகின்றது. பெண்களுக்கே உரியதாகிய இறைவழிபாட்டுச் சிறப்பினை இக்காலச் சமுதாய மக்களையும் உட்படுத்தும் வகையில் இப்பாடல் அமைந்துள்ளதை அறிய முடிகின்றது.

### உயர்சிந்தனைகள்

உயர்சிந்தனைகள் என்பது செவ்வியல் பண்புகளுள் ஒன்று. ஓர் உயர்ந்த நற்செயல், அறச்செயல், கொடைச்செயல் போன்றவைதான் உயர்சிந்தனைப் பண்புகளாகின்றன.

**கொடைத்திறம்**

தமிழக வேந்தர்கள் வீரப்புகழோடு, கொடைப்புகழும் வாய்ந்தவர்களாகத் திகழ்ந்துள்ளனர். என்பதனை,

"யாமும் சேறுகம்; நீயிரும் வம்மின்,
துயிலுங் கோதைத் துளங்கு இயல் விறலியர்!
கொளை வல் வாழ்க்கை நும் கிளை இனிது உணீஇயர்!"[12] (பதிற். 49)

என்கிறார் புலவர். விறலியருக்குப் பலபெண்யானைகளை வழங்கினான். பல முத்துமாலைகளைத் தந்தான். உடுப்பவையும், அணிபவையும் பெறுவது மட்டும் அல்லாமல் உண்பவற்றையும் கொடையாகப் பெற்றனர்கள் என்பதனை அறியமுடிகின்றது. இவ்வாறு மன்னர்கள் கொடைத்திறம் மிக்கவர்களாகவே இருந்துள்ளனர். இத்தகைய உயர்சிந்தனைப் பண்பினைச் சமுதாயமும் ஏற்றால் நாட்டு மக்களும் முன்னேற்றம் அடைவார்கள். இன்றும் நம் சமுதாயத்தில் கொடையாளிகள் பலரும் உள்ளனர். எனவே செவ்வியல் பண்புகள் சமுதாயம் சார்ந்தே காணப்படுகின்றன என்பதை இப்பாடலின் மூலம் அறியமுடிகிறது.

**சமயச் சார்பற்ற தன்மை**

சமயச் சார்பற்ற தன்மை என்பது செவ்வியல் பண்புகளுள் ஒன்றாகும். இறை வழிபாடு சமயத்தைச் சாராமல் இருந்தால் அதுவே சமயச்சார்பற்ற தன்மையாகும். இத்தன்மை சங்க இலக்கியக் காலத்தில் அதிகமாகவே இருந்தது. அப்பொழுது மக்கள் இறைவழிபாட்டில் எக்கடவுளை வணங்கினார்கள் என்பதை இப்பண்பு விளக்குகின்றது.

**இயற்கையும் இறை உணர்வும்**

சங்க காலத்தில் மக்கள் இயற்கையைத் தெய்வ உணர்வுடன் ஒன்றுபடுத்திப் பார்த்துள்ளனர். இயற்கைப் பொருள்களான மலை, அருவி, கடல் போன்றனவற்றில் இறைவன் உறைவதாக நம்பி வாழ்ந்துள்ளனர். சமயம் வாழ்க்கை நெறியாக இருந்தலேயன்றி அது ஒரு நிறுவனமாக வளர்ந்து சமுதாயத்தினை ஆட்டிப்படைக்கவில்லை. சிவனும், திருமாலும் அன்று வணங்கப்பட்டு வந்தாலும், சைவம் வைணவம் என்னும் சமயங்கள் அன்று உருவாகவில்லை என்று அ. தட்சிணாமூர்த்தி அவர்களும் குறிப்பிட்டுள்ளார். அவ்வாறே,

"தீயினுள் தெறல் நீ; பூவினுள் நாற்றம் நீ;
கல்லினும் மணியும் நீ; சொல்லினுள் வாய்மை நீ;
அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ;
வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ;
வெஞ்சுடர் ஒளியும் நீ; திங்களும் அளியும் நீ;
அனைத்தும் நீ; அனைத்தினுள் உட்பொருளும் நீ;"[13] (பரி. 3)

என்கிறது பாரிபாடல். சங்க காலத்தில் இயற்கையில் இறை உணர்வு கலந்து இருந்ததை உணரலாம். எச்சமயக் கடவுள் என்றெல்லாம் சுட்டப்படவில்லை. சங்க காலத்தில் தெய்வ உணர்வு இருந்ததைத்தவிர 'சமயம்' என்ற நிறுவனவுணர்வு சங்க மக்களிடையே இல்லை என்பதை செ. சாரதாம்பாள் அவர்களும் கூறியுள்ளார். ஆகவே இவை சமயச் சார்பற்ற தன்மையுடைய செவ்வியல் பண்பாகும். இக்கால சமுதாயத்திலும் இச்செவ்வியல் பண்புகள் காணப்படுகின்றன. இன்றும் மக்கள் சிவன், முருகன், திருமால் போன்ற அனைத்துத் தெய்வத்தையும் வணங்குகின்றனர். ஆகவே செவ்வியல் பண்புகள் சமுதாயத்தில் வேரூன்றி நிற்பதை நம்மால் உணர முடிகின்றது.

**கொற்றவை வழிபாடு**

பதிற்றுப்பத்து மதம் சார்ந்த நூல் அன்று. அதில் ஆகமமுறைப்படி வழிபாட்டு முறைகள் காணப்பெறவில்லை. மாறாகத் தமிழர் தம் வீரம் சார்ந்த கொற்றவை வழிபாடு காணப்பெறுகிறது. அது மதம் சாராதது என்பதனை,

"உரு கெழு மரபின் அயிரை பரைஇ"[14] (பதிற். 88)

"... அஞ்சு வரு மரபின்
கடவுள் அயிரையின் நிலைஇ"[15] (பதிற். 79)

என்கிறது பதிற்றுப்பத்து. அயிரை மலையிலிருந்த வீரத்தின் தெய்வமான கொற்றவையை வழிபட்டமைக்குப் பதிற்றுப்பத்து அடிகளே சான்றாகும். கொற்றவை வழிபாடு போரில் மன்னர்களின் வெற்றிகருதிய வழிப்பாட்டு முறையாகும். இச்சமயச்சார்பற்ற செவ்வியல் பண்பானது இக்காலச் சமுதாயத்திலும் நிலைபெற்று இருக்கின்றது. இக்கால மக்கள் இன்று பெரும்பாலானோர் சமயம் சாராத சிறுதெய்வ வழிபாட்டினையே அதிகம் வழிபடுகின்றனர். பெரும்பாலோனோர்க்கு குலதெய்வம் சிறுதெய்வ வழிபாடே ஆகும். ஆகவே செவ்வியல் பண்புகள் சமுதாயத்தில் அதிகமான இடங்களில் வேறூன்றி நிற்கின்றது என்பதை நம்மால் அறியமுடிகின்றது.

**முடிவுரை**

- செவ்வியல் பண்புகளான தலைமைப்பண்பில் தலைவன், புலவர்களின் வாய்மைக் கூறுகள் சமுதாயத்தோடு ஒன்றி இருக்கின்றது.
- அன்பு, உலகுடன் ஒன்றி வாழ்தல், ஈகை போன்ற குணங்கள் சமுதாயத்தில் நிலவுகின்றன. இப்படிப்பட்ட குணங்கள் சங்கப்பாடல்கள் அனைத்திலுமே சமுதாயத்திற்குப் பயன்படக் கூடியவையாக காணப்பெறுகின்றன.
- மரபுடைமை, நடுவுநிலைமை, நிலைபேறு, தனித்தன்மை போன்ற செவ்வியல் பண்புகள் சமுதாயத்தோடு ஒன்று கலந்து காணப்படுகின்றது.
- தலைமைப்பண்பு, உயர்சிந்தனைப்பண்பு, சமயச்சார்பற்ற தன்மை போன்ற பண்புகள் சிறந்த பண்புகளாக விளங்குகின்றன. அவை சமுதாய மக்களிடம் நிலைத்தும் நின்றுள்ளது.
- அறிஞர் பெருமக்கள் கூறியுள்ள செவ்வியல் பண்புகள் அனைத்துமே சங்க இலக்கியங்களில் பொதிந்து கிடைக்கின்றன. அவ்வாறு புதைந்து கிடக்கும் பண்புகள் சமுதாயத்திற்கு இன்றும் நல்வழி காட்டுகின்றன.
- சாகாவரம் பெற்ற சங்க இலக்கியங்கள் யாவும் செவ்வியல் பண்புகளுடனேயே விளங்குகின்றன. அவ்வாறு விளங்கும் பண்புகள் அனைத்துமே சமுதாயத்திற்குப் பயனுள்ளதாகவும், சமுதாயத்தில் வேரூன்றி நிற்கும் பண்புகளாகவும் விளங்குகின்றது என்பதை இவ்வாய்வுக் கட்டுரை தெளிவுப்படுத்துகின்றது.

**துணைநூற்பாட்டியல்**


1. எட்டுத்தொகை நூல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை-600 098.
2. சுப்பிரமணியன். கா, சங்ககாலச் சமுதாயம், இரண்டாம் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3. மீனாட்சி சோமசுந்தரம். ச.மெ, செவ்வியல் நோக்கில் செம்மொழி இலக்கியம், மெய்யப்பன் பதிப்பு, சிதம்பரம்.
4. மாதையன். பெ, சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் அம்பத்தூர், சென்னை.
5. சாரதாம்பாள். செ, சங்கச் செவ்வியல் சங்கக் கிரேக்க ஒப்பீடு, மீனாட்சி பதிப்பு, மதுரை.